கல்லூரி மாணவர்களுடன் முதல்வர் கலந்துரையாடல்

சேலம், பிப். 15: தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், 'நான் முதல்வன்' திட்டத்தில் பயன்பெறும் கல்லூரி மாணவ, மாணவியருடன் கலந்துரையாடினார்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், கள ஆய்வில் முதல்வர் திட்டத்தின் கீழ் சேலம், கிருஷ்ணகிரி, தருமபுரி, நாமக்கல் மாவட்டங்களில் ஆய்வு மேற்கொள்வதற்காக புதன்கிழமை காலை சேலம் வந்தார்.

இதன் ஒரு பகுதியாக, சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் பயன்பெற்று வரும் கல்லூரி மாணவ, மாணவியருடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்துரையாடினார்.

தமிழக முதல்வரின் கனவு திட்டமான 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் பயிற்சிகள் பெற்று வரும் பொறியியல் கல்லூரி மாணவ, மாணவியர், இத்திட்டத்தின் மூலம் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களான கிளவுட் கணினி தொழில்நுட்பம், டேட்டா அனாலிடிக்ஸ், மெஷின் லேர்னிங், ஹை ரைஸ் பில்டிங், செயற்கை நுண்ணறிவு, ரோபோடிக்ஸ் போன்ற திறன் பயிற்சிகள் பெற்ற அனுபவத்தையும், இப்பயிற்சிகள் அவர்களுடைய வேலைவாய்ப்புக்கு எவ்வாறு பயன்பெற்றது என்பது குறித்தும் விரிவாக எடுத்துரைத்தனர்.

பன்னாட்டு நிறுவனங்களான ஐ.பி.எம்., மைக்ரோசாப்ட், டி.சி.எஸ்., இன்ஃபோசிஸ், கூகுள், ஏ.டபிள்யூ.எஸ்., எல் அன்ட் டி போன்றவற்றுடன் இணைந்து உலக தரத்திலான பயிற்சிகளை கட்டணமின்றி கிராமப்புற மாணவர்களும் பயன்பெறும் வகையில் அமைந்த 'நான் முதல்வன்' திட்டம், கல்வி பயிலும் பருவத்திலேயே பன்னாட்டு தொழில் நிறுவனங்களில் வேலைவாய்ப்பை உறுதி செய்தது குறித்தும் விவரித்தனர்.

மேலும், படிக்கும்போதே உயர்தொழில்நுட்பம் சார் தொழில்முனைவை ஊக்குவித்தும், அதன்மூலம் அவர்களுடைய பொருளாதாரம் மேம்படவும், வேகமாக மாறிவரும் தொழில்நுட்ப உலகத்துக்கு ஏற்ற திறன் பயிற்சிகளை இத்திட்டத்தின் கீழ் வழங்குவதன் மூலம் மாணவ சமுதாயத்துக்கு தன்னம்பிக்கை ஏற்படுகிறது என்றும் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர். இத்திட்டத்தை வழங்கிய முதல்வருக்கு தங்களது நன்றியை மாணவ, மாணவியர் தெரிவித்தனர்.

இதில், தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு, ஆட்சியர் செ.கார்மேகம், சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை முதன்மைச் செயலாளர் த.உதயசந்திரன், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் ஜெ.இன்னசென்ட் திவ்யா உள்ளிட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

ஏழை, எளிய மக்களின் புகார்களுக்கு நீதி கிடைக்க உறுதுணையாக இருக்க வேண்டும்

காவல் துறையினருக்கு முதல்வர் அறிவுரை

சேலம், பிப். 15: குற்ற நிகழ்வுகளில் பாதிக்கப்படுபவர்கள் நடுத்தர, ஏழை எளிய மக்களாக இருப்பதால், அவர்களது புகார்களின் உண்மைத் தன்மையை அறிந்து நீதி கிடைக்க உறுதுணையாக இருக்க வேண்டும் என காவல் துறையினருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தினார்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், 'கள ஆய்வில் முதல்வர்' திட்டத்தின் கீழ், சேலம், நாமக்கல் தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களின் காவல் துறை உயர் அலுவலர்களுடன் சட்டம் - ஒழுங்கு தொடர்பாக ஆய்வு மேற்கொண்டார்.

இந்தக் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின், மாவட்டங்களில் பல்வேறு சமூக குற்றங்களைத் தடுப்பதற்காக எடுக்கப்பட்டு வரும் சிறப்பான நடவடிக்கைகளுக்கு காவல் துறை கண்காணிப்பாளர்களுக்கும், மாவட்ட ஆட்சியர்களுக்கும் பாராட்டுகளை தெரிவித்தார்.

அப்போது முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

காவல் துறையின் பணிகள் மக்கள் எளிதில் அணுகும் விதமாக இருக்க வேண்டும், காவல் நிலையத்துக்கு மக்கள் எவ்வித அச்சமுமின்றி புகார் அளிக்க வரக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும்.

மக்களுக்கும், காவல் துறைக்குமான உறவு என்பது எளிமையானதாகவும், மனிதநேய அடிப்படையிலும் அமைய வேண்டும். இதில், காவல் துறை உயர் அலுவலர்கள் காட்டும் அணுகுமுறை தான் அவர்களுக்குக் கீழ் பணிபுரியும் காவல் ஆய்வாளரும் மேற்கொள்வார் என்பதை எப்போதும் மனதில் கொள்ள வேண்டும்.

காவல் துறையின் செயல்பாடுகள் மக்களுக்குத் தெரியும்படி வெளிப்படையாக இருக்கவேண்டும். எந்தவொரு சம்பவத்தை பற்றியும் நடந்த பிறகு ஆராய்வதைவிட, அது நடப்பதற்கான சாத்தியக்கூறுகளை முன்பே அறியப்பெற்று அதைத் தடுக்கும் நடவடிக்கைகளில் கவனம் செலுத்துவது சிறப்பாக இருக்கும்.

இதற்கு காவல் துறையின் க்யூ பிராஞ்ச், நுண்ணறிவுப் பிரிவு ஆகியவை தரும் செய்திகளை கவனமாக ஆராய்ந்து தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

சட்டவிரோதச் செயல்களை, குற்றச் சம்பவங்களை தடுப்பது தான் திறமையான காவல் துறைக்கு இலக்கணமாகும். சமயம், மதம் அல்லது பண்பாடு சார்ந்த நிகழ்வுகளில், உதாரணத்துக்கு கோயில் திருவிழாக்கள் எருது விடும் நிகழ்வுகள் போன்றவற்றில் கவனக் குறைவாக இருந்து விட்டால், அது மாவட்ட நிர்வாகத்துக்கும், அரசுக்கும் உள்ள நற்பெயரை பாதித்துவிடும்.

காவல் துறை கவனம் செலுத்த வேண்டிய மற்றுமொரு முக்கிய இனம் போதைப் பொருள் ஒழிப்பு ஆகும். சில மாவட்டங்களில் சிறப்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருந்தாலும், சரகம் முழுவதும் போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட வேண்டும். மாநில எல்லைப்பகுதியாக இருப்பதால் உங்கள் கவனம் இன்னும் அதிகமாக இருக்க வேண்டும்.

காவல் கண்காணிப்பாளர்கள், காவல் நிலையங்களை அடிக்கடி ஆய்வு மேற்கொண்டு அங்கு வரும் பொதுமக்களை சந்திப்பது, மக்களிடையே நல்ல பெயரை பெற்றுத் தருவதோடு, காவலர்களிடையே ஒரு எச்சரிக்கையான நிலையையும் உண்டாக்கும்.

இந்த மாவட்டங்களில் எந்தச் சூழ்நிலையிலும் ஜாதிக் கலவரம் ஏற்படாமல் கட்டாயம் பார்த்துக் கொள்ள வேண்டும். இதில் மாவட்ட ஆட்சியர்களின் பங்கு மிக முக்கியமானது. வாராந்திர சட்டம் - ஒழுங்கு கூட்டத்தில் இதனை வருவாய் மற்றும் காவல் துறையினருடன் ஒருங்கிணைந்து ஆய்வு நடத்தி, தேவையான இடங்களில் அமைதிப் பேச்சுவார்த்தைகளை நடத்தி பிரச்னைகளை ஆரம்பக் கட்டத்திலேயே தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வருவாய்த் துறை, காவல் துறை ஆகிய துறைகள் நீதித் துறையுடன் ஒருங்கிணைந்து வழக்குகளை விரைந்து முடிவுக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆண்டுக்கணக்கில் வழக்குகளை நடத்துவது குற்றவாளிகளுக்குத் தான் சாதகமாக முடியும்.

எனவே, காவல் கண்காணிப்பாளர்கள் பழைய வழக்குகளை குறிப்பிட்ட காலத்துக்குள் முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். இதை காவல் துறைத் தலைவர்கள், துணைத் தலைவர்கள் ஆகிய உயர் நிலை அலுவலர்கள் ஆய்வு செய்ய வேண்டும்.

நம்முடைய பணி மக்களுக்கானது என்பதை உணர வேண்டும். இளைஞர்கள் மற்றும் மாணவர்களின் எதிர்காலத்தை சீரழிக்கும் போதைப் பொருளை பெருமளவு ஒழிக்கும் காவல் கண்காணிப்பாளரை எப்போதும் பெரிதும் பாராட்டுவேன்.

பெரும்பாலும், குற்ற நிகழ்வுகளில் பாதிக்கப்படுபவர்கள், நடுத்தர மற்றும் ஏழை எளிய மக்களாக இருப்பதால், அவர்களிடம் கடுமையாக நடந்து கொள்ளாமல் அவர்களின் புகார்களில் உள்ள உண்மைத் தன்மையை ஆய்ந்தறிந்து அவர்களுக்கு நீதி கிடைக்க உறுதுணையாக இருக்க வேண்டும். அப்போது தான் 'காவல் துறை உங்கள் நண்பன்' என்ற சொற்றொடர் உண்மையாகும்.

பல்வேறு அரசுப் பணிகள் இருந்தாலும், காவல் துறைக்கென்று ஒரு தனி சிறப்பு உண்டு, அதற்கான பெருமையையும், மாண்பையும் நீங்கள் இன்னும் உயர்த்திக் காட்டும் வகையில் பணியாற்ற வேண்டும் என்றார்.

இந்தக் ஆய்வுக் கூட்டத்தில், தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு, முதல்வரின் முதன்மைச் செயலாளர் உதயசந்திரன், காவல் துறை டி.ஜி.பி. சி.சைலேந்திரபாபு, கூடுதல் டிஜிபி (சட்டம் - ஒழுங்கு) கி.சங்கர், ஆட்சியர்கள் செ.கார்மேகம் (சேலம்), ஸ்ரேயா பி.சிங் (நாமக்கல்), தீபக் ஜேக்கப் (கிருஷ்ணகிரி), கே.சாந்தி (தருமபுரி), மேற்கு மண்டல ஐ.ஜி. ஆர்.சுதாகர், மாநகர காவல் ஆணையர் நஜ்மல் ஹோடா, சேலம் சரக டி.ஐ.ஜி. எஸ்.ராஜேஸ்வரி, காவல் கண்காணிப்பாளர்கள் ஆர்.சிவகுமார் (சேலம்), சரோஜ் குமார் தாக்குர் (கிருஷ்ணகிரி), ச.கலைச்செல்வன் (நாமக்கல்), ந.ஸ்டீபன் ஜேசுபாதம் (தருமபுரி) மற்றும் மாநகர காவல் துணை ஆணையர்கள் எஸ்.பி.லாவண்யா, மாடசாமி, காவல் துறை உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.

சேலம் ஈரடுக்கு பேருந்து நிலைய கட்டுமானப் பணி ஆய்வு

'கள ஆய்வில் முதல்வர்' திட்டத்தின் கீழ் சேலம் சீர்மிகு நகர திட்டத்தில், ரூ. 92.13 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் ஈரடுக்கு பேருந்து நிலையத்துக்கான கட்டுமானப் பணிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் புதன்கிழமை நேரில் ஆய்வு செய்தார்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், கள ஆய்வில் முதல்வர் திட்டத்தின் கீழ் சேலம், கிருஷ்ணகிரி, தருமபுரி, நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் ஆய்வு மேற்கொள்வதற்காக புதன்கிழமை காலை சேலம் வந்தார்.

சேலம் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ், ரூ. 92.13 கோடி மதிப்பீட்டில் சேலம் பழைய பேருந்து நிலைய வளாகத்தில் கட்டப்பட்டு வரும் ஈரடுக்கு பேருந்து நிலையத்துக்கான கட்டுமானப் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது, தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு, ஆட்சியர் செ.கார்மேகம், மாநகராட்சி ஆணையர் தா.கிறிஸ்துராஜ், அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

காதப்பள்ளி அரசுப் பள்ளியில் ஆட்சியர் ஆய்வு

நாமக்கல், பிப். 15: நாமக்கல் மாவட்டம், காதப்பள்ளி அரசு நடுநிலைப் பள்ளியில் மாவட்ட ஆட்சியர் ஸ்ரேயா பி.சிங் அண்மையில் ஆய்வு மேற்கொண்டார் (படம்).

மாணவ, மாணவிகளின் கற்றல் திறன் குறித்து புத்தகங்களை வாசிக்குமாறு கூறி ஆய்வு செய்தார். ஆங்கிலத்தை சரளமாக வாசிப்பதை அவர் பார்வையிட்டார். மேலும், அதன் பொருள் குறித்தும் ஆட்சியர் கேட்டறிந்தார். அந்த பள்ளியில் பராமரிக்கப்படும் பதிவேடுகளைப் பார்வையிட்டார். மேலும், பள்ளி கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட்
மண்டல அலுவலகம், திருச்சி.
நகை ஏல அறிவிப்பு

(கடந்த 05.12.2022 முதல் ஸ்ரீராம் சிட்டி யூனியன் பைனான்ஸ் லிமிடெட் நிறுவனம் ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட் என்ற பெயரில் செயல்பட்டு வருகிறது.)

எங்கள் நிறுவனத்தில் **31.12.2021** வரை நகைக்கடன் மற்றும் **30.06.2022** வரை சிறப்பு நகைக்கடன் திட்டத்தின்கீழ் ஈடு வைக்கப்பட்டு காலவரையறை முடிந்தும் திருப்பப்படாத நகைகள் கெடு முடிவடைந்துள்ளது. மேற்படி நகைக்கடன்களுக்கு உரிய கடன்தாரர்களுக்கு சாதாரண தபால் மற்றும் ஏலதாரர் மூலமாக பதிவு தபால் அனுப்பியும் ஈடு வைக்கப்பட்ட நகைகளை மீட்கவோ அல்லது கடன்களை புதுப்பிக்கவோ இல்லை. அதனால் சம்பந்தப்பட்ட கடன்களுக்கு உரிய ஈடு வைக்கப்பட்ட நகைகளை நிறுவனத்தின் விதிப்படி கீழ்கண்ட விபரப்படி ஏலம் விடப்படும். நகை அடகு வைத்தவர் இறந்து இருந்தாலும், வெளியூர் சென்றிருந்தாலும் இந்த அறிவிப்பு அவர்கள் வாரிசுக்கும் பொருந்தும். பதிவு தபால் கிடைக்கப் பெறாதவர்களுக்கும், முகவரி மாற்றம் செய்தவர்களுக்கும் இந்த அறிவிப்பு பொருந்தும். ஏலத்திற்கு வரும் பாக்கெட்டுகளில் குறிப்பிட்ட பாக்கெட்டுகளை ஏலம் விடாமல் நிறுத்தி வைப்பதற்கு நிறுவனத்திற்கு உரிமை உண்டு.

ஏல தேதி	நேரம்	நகை ஈடு வைக்கப்பட்டுள்ள கிளைகள்	ஏலம் நடைபெறும் இடம்	நகை மீட்க கடைசி தேதி
21.02.2023	காலை 10.00 மணி	கரூர்-II (RECOVERY)	நெ.67, முதல தளம், சிவன காமபளகஸ, MELA PRATHANA ரோடு, கரூர் – 639 001.	18.02.2023
21.02.2023	நணபகல 12.00 மணி	சஙககிரி	நெ.164, முதல தளம், சேலம மெயின ரோடு, சங்கிரி, சேலம் – 637 301.	18.02.2023
21.02.2023	மதியம 2.00 மணி	எடபபாடி	நெ.17, முதல தளம், அரசு மருததுவமனை அருகில், நய்னம்பட்டி ரோடு, எடப்பாடி – 637 105.	18.02.2023
21.02.2023	மாலை 4.00 மணி	மேட்டூர்	நெ. 8/12, முதல தளம், சதுர அங்காடி, மேட்டூர் அணை, மேட்டூர் – 636 401.	18.02.2023
22.02.2023	காலை 10.00 மணி	நாமக்கல் – I & சேந்தமங்கலம்	நெ.169–C, முதல தளம், கவுண்டர் ஹார்டுவர் பில்டிங், துறையூர் ரோடு, நாமக்கல் – 637 001.	20.02.2023
22.02.2023	நணபகல 12.00 மணி	பரமததிவேலூர்	நெ.121/2, ராஜா ஷாபபிங காமபளகஸ, கடை தெரு, பரமத்திவேலூர் – 638 182.	20.02.2023
22.02.2023	மதியம 2.00 மணி	திருசெங்கோடு & குமாரபாளையம்	நெ.1/10, 1/16, ஸ்ரீமகேஸ்வரி காம்பளக்ஸ், C.H.B. காலனி, கொங்கு மண்டபம் அருகில், வேலூர் மெயின் ரோடு, திருசெங்கோடு – 637 211.	20.02.2023
22.02.2023	மாலை 4.00 மணி	ராசிபுரம் – I	நெ.58, TVS தெரு, வெங்கடேஸ்வரா TVS SHOW ROOM அருகில், ராசிபுரம் – 637 408.	20.02.2023
23.02.2023	காலை 10.00 மணி	காவேரிபட்டிணம்	நெ.52, G.K.R. காமபளகஸ, அப்பா சாமி நாயுடு தெரு, கோச மேடு, TMB மாடியில், காவேரிபட்டிணம் – 635 112.	21.02.2023
23.02.2023	மதியம 1.00 மணி	செவவாயபேட்டை, இளமபிள்ளை, குகை, சேலம் – III & FIVE ROADS.	நெ.30/1, அருண பிளாசா, FAIRLANDS, போலீஸ் ஸ்டேசன் எதிரில், அழகாபுரம், சேலம் – 636 016.	21.02.2023
23.02.2023	மாலை 4.00 மணி	ஓமலூர் & தாரமங்கலம	நெ.42/4, தாமபுரி மெயின ரோடு, ஓமலூர், சேலம் – 636 455.	21.02.2023

கடன் பெற்றவர் கடன் எண், பெயர் விலாசம், நகைகளின் விபரம் நகை ஈடு வைத்த கிளையின் அறிவிப்பு பலகையில் காணலாம். விளம்பர செலவு தனியே வசூல் செய்யப்படும். மேற்கண்ட நகைகளை அடகு வைத்தவர் மேற்கூறிய தேதியில் **மாலை 3.00 மணிக்குள்** அசல், வட்டி, ஏலச்செலவு மற்றும் விளம்பர செலவுகளை செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். **ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு லட்சம்)** டேவணி தொகை கட்டியவர்கள் மட்டும் ஏலத்தில் கலந்து கொள்ளலாம். ஏலத்தில் கலந்து கொள்பவர்கள் PAN கார்டு மற்றும் அட்ரஸ் புரூஃப் கொடுக்க வேண்டும்.

தேதி : 16.02.2023
இடம் : திருச்சி

இப்படிக்கு
நிர்வாக குழு அங்கீகாரம் பெற்ற ஏலதாரர்.

கோடக் மகிந்திரா வங்கி லிமிடெட்
kotak
Kotak Mahindra Bank
சேலம் கிளை: 5–330, சோனியா பிளாசா, முதல் தளம், ஸ்டேட் பாங்கு காலனி, AVR சர்க்கிள் அருகில், சேலம் – 636 004. தொ.பே. எண்: 0824–4259177.

அசையும்/அசையாச் சொத்துக்களுக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002–இன் கீழும் அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6)–இன் விதிமுறைகளின்படியும் நடைபெற உள்ள அசையாச் சொத்துக்களுக்கான E–ஏல விற்பனை அறிவிப்பு

[illegible]

வ. எண்	விற்பனைக்காக உள்ள சொத்தின் விவரம்
1.	[illegible] குறைந்தபட்ச விலை – ரூ.18,14,400/– மற்றும் டேவணித்தொகை (EMD) – ரூ.1,81,440/–

E–ஏலம் மூலம் நடைபெற உள்ள அசையாச் சொத்துக்கான விற்பனையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்:

[illegible]

நாள்: 16.02.2023
இடம்: நாமக்கல்
கோடக் மகிந்திரா வங்கி

சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா
सेन्ट्रल बैंक ऑफ़ इंडिया
Central Bank of India
CENTRAL TO YOU SINCE 1911

அசையா சொத்து கையகப்படுத்தியதற்கான அறிவிப்பு
(Possession Notice)

சேலம் கிளை : 125/206, 2–வது அக்ரஹாரம், சேலம் – 636001

Under Securitisation and Reconstruction of Financial Assets And Enforcement of Security Interest Act 2002

SARFAESI சட்டம் 2002 மற்றும் அதன் பிரிவு 13 (2) மற்றும் விதி 3 ன் கீழ் அதிகாரம் பெற்ற சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா வங்கி அதிகாரி கீழ்க்கண்ட தேதியிட்ட கடன் கேட்பு அறிவிப்புகளை எங்கள் வங்கியின் **சேலம் கிளையில்** இருந்து கடன்பெற்றுள்ள இதன்கீழ் விவரிக்கப்பட்டுள்ள கடன் பெற்றவர் / உத்திரவாதம் அளித்தவர் ஆகியோருக்கு அறிவிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள கடன் நிலுவைத் தொகைகளை கடன் கேட்பு அறிவிப்பு கிடைக்கப் பெற்ற நாளிலிருந்து 60 நாட்களுக்குள் மேலும் உண்டான வட்டி, கட்டணங்கள் மற்றும் செலவினங்கள் ஆகியவற்றுடன் திரும்பச் செலுத்தக் கோரி அனுப்பி இருந்தார்.

கடன் பெற்றவர் / உத்திரவாதம் அளித்தவர் பெயர் மற்றும் முகவரி : கடன் பெற்றவர் : திருமதி.R.தேன்மொழி, க/பெ.திரு.C.ராஜவேல், கதவு எண்.63/6, ரத்தினபுரி, ஆத்துக்காடு, கோரிமேடு, கண்ணன்குறிச்சி, சேலம் - 636008. **இணைந்து கடன் பெற்றவர் : திரு.C.ராஜவேல், த/பெ.திரு.M.சின்னசாமி,** கதவு எண்.63/6, ரத்தினபுரி, ஆத்துக்காடு, கோரிமேடு, கண்ணன்குறிச்சி, சேலம் - 636008. **உத்திரவாதம் அளித்தவர் : திரு.D.செல்வக்குமார், த/பெ.திரு.D.N.சுந்தரராஜ்,** கதவு எண்.49, ரத்தினபுரி, கோரிமேடு, சேலம் – 636008.

கேட்பு அறிவிப்பு தேதி : 08.09.2022 | **சுவாதீனம் எடுக்கப்பட்ட தேதி : 14.02.2023**

கடன் நிலுவைத் தொகை : 08.09.2022 வரையில் ரூ.1,99,264.83 வட்டி மற்றும் கட்டணங்கள்

திருமதி.R.தேன்மொழி, க/பெ.திரு.C.ராஜவேல் அவர்களின் பெயரில் உள்ள அசையாச் சொத்து விபரம் : அஸ்தம்பட்டி கிராமம், சேலம் மாநகராட்சி, சேலம் மேற்கு பதிவு மாவட்டம் மற்றும் சார்பதிவு மாவட்டம், RS No.3/5A, தற்போது 3/38D, சைட் எண்.1, கதவு எண்.62/1, ஆத்துக்காடு, ரத்தினபுரி, கோரிமேடு, கண்ணன்குறிச்சி அஞ்சல், சேலம் - 636008, இதில் 1710 சதுரடி மற்றும் கட்டிடம் சகிதம். எல்லைகள் : புருஷோத்தமன் மற்றும் ஏனையோரது நிலத்திற்கு வடக்கு, 23 அடி லேஅவுட் சாலைக்கு தெற்கு, பிளாட் எண்.7-க்கு கிழக்கு, பிளாட் எண்.2-க்கு மேற்கு.

கடன் பெற்றவர்கள் / உத்திரவாதம் அளித்தவர் கடன் தொகையைத் திரும்பச் செலுத்த தவறியதால், வங்கியின் கீழ்க்கண்ட அதிகாரம் பெற்ற அதிகாரி SARFAESI சட்டம் 2002 - ன் பிரிவு 13ன் உட்பிரிவு (4) மற்றும் விதி 8 ன் கீழ், தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி மேற்கண்ட சொத்தினை, வங்கிக்காக மேற்கண்ட தேதியில் **அடையாள சுவாதீனம் செய்து கையகப்படுத்தியுள்ளார்** என்பதை கடன் பெற்றவர்கள் / உத்திரவாதம் அளித்தவர் மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரிவித்துக் கொள்கிறார்.

குறிப்பாக, கடன் பெற்றவர்கள் / உத்திரவாதம் அளித்தவர் மற்றும் பொதுமக்கள் மேற்கண்ட சொத்தின் மீது எந்தவித சம்பந்தமும், நடவடிக்கையும் மேற்கொள்ளக் கூடாது என எச்சரிக்கப்படுவதுடன், அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் பட்சத்தில் அது சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா வங்கிக்கு செலுத்தப்பட வேண்டிய மேற்கண்ட நிலுவை தொகைகள் மற்றும் வட்டி மற்றும் ஏனைய கட்டணங்கள் ஆகியவற்றின் பிணைக்கு உட்படுத்தப்படும் என்பதையும் அறியவும்.

மேற்கண்ட சட்டப் பிரிவு 13ன் உட்பிரிவு (8)ன் பிரகாரம் இருக்கின்ற கால அவகாசத்தின்படி ஈடுகாட்டப்பட்டுள்ள சொத்தினை மீட்டுக்கொள்ளும் வசதி உண்டு என்னும் விபரம் கடன்பெற்றவரின் கவனத்திற்கு இதன்மூலம் கொண்டுவரப்படுகிறது.

தேதி : 14.02.2023
இடம் : சேலம்

அங்கீகாரம் பெற்ற அதிகாரி
சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா

varthana
வர்த்தனா ஃபைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்
(முன்பு M/s.திருமேனி ஃபைனான்ஸ் பிரைவேட் லிட்., என்று அறியப்பட்டது)
பதிவு அலுவலகம்: எண் 5 BC-110, வரசித்தி, 3ஆவது தளம், வெளிவட்டச் சாலை, சர்வீஸ் சாலை, 3ஆவது பிளாக், HRBR லே அவுட், கல்யாண் நகர், பெங்களூரு–560043. இணையத்தளம்: www.varthana.com, மின்னஞ்சல்: care@varthana.com, தொலைபேசி: 080–68455777, கிளை அலுவலகம்: எண் 130, இரண்டாவது தளம், சாஸ்திரி சாலை, ராம் நகர், HDFC வங்கி அருகில், கோயம்புத்தூர் – 641009.

கோரிக்கை அறிவிப்பு

[illegible]

கடன் கணக்கு எண்கள்: U20CMB–SAL–014536, U21CMB–SAL–016725, SAL09213S & SAL5819S, [illegible]

[illegible]

நாள்: 16.02.2023, இடம்: கோயம்புத்தூர்
அங்கீகரிக்கப்பட்ட அலுவலர், வர்த்தனா ஃபைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
மண்டல அலுவலகம், ஐந்து ரோடு, சேலம் - 636 004
போன் : 0427-2448440, 2448690, 2448540

கையகப்படுத்தியதற்கான அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாகுதல், நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்து பேரிலான உரிமை சட்டம் 2002-ன் பிரிவு 13(2) படியும் மற்றும் சொத்து மீதான கடனீட்டு உரிமையை அமலாக்கும் விதி 3-ன் படியும் கீழே கையொப்பமிட்டுள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் அங்கீகாரம் பெற்ற அலுவலரால் **01-12-2022** அன்று கேட்பு அறிவிப்பு **1) M/s. N S A எக்ஸ் சென்டர்,** உரிமையாளர் **திரு. N.சுரேஷ், த/பெ.நடேசன்,** அனியாபுரம் புதூர் கிராமம் மற்றும் அஞ்சல், அனியாபுரம், நாமக்கல் - 637017. **(கடன்தாரர்/அடமானதாரர்)** ஆகியோருக்கு கடன் தொகையான **30-11-2022** அன்றுள்ளபடி **ரூ.35,94,599/- (ரூபாய் முப்பத்து ஐந்து இலட்சத்து தொண்ணூற்று நான்காயிரத்து ஐந்நூற்று தொண்ணூற்று ஒன்பது மட்டும்)** மற்றும் ஒப்பந்த விகிதத்தில் வட்டியுடன் மேற்படி நோட்டீஸ் கிடைத்த அறுபது நாட்களுக்குள் செலுத்தும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது.

1. கடன் பெற்றவர் நிலுவையில் உள்ள கடன் தொகையை செலுத்த தவறியதால் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் விதி 8ன் படியும் கீழே கையொப்பமிட்ட அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் கீழ்கண்ட சொத்துக்களை **14-02-2023** அன்று கையகப்படுத்தப்பட்டுள்ளது என்று கடன்தாரருக்கும் / பொதுமக்களுக்கும் அறிவிக்கப்படுகின்றது.

2. குறிப்பாக கடன்தாரருக்கும், பொதுவாக பொது மக்களுக்கும் எச்சரிக்கப்படுவது யாதெனில் கீழ்கண்ட சொத்துக்களின் மேல் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளக் கூடாது எனவும், அவ்வாறு மேற்கொள்ள வேண்டுமானால் **இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, லத்துவாடி கிளை** சேரவேண்டிய தொகையான **13-02-2023** அன்றுள்ளபடி **ரூ.36,75,025/-** மற்றும் ஒப்பந்த விகிதத்தில் வட்டி ஈடு உள்ளதென்றும் மற்றும் இதனை செலுத்திய பிறகே மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவிக்கப்படுகிறது. மேற்கூறிய தொகை **13-02-2023** அன்றுள்ளபடி **ரூ.36,75,025/- (ரூபாய் முப்பத்து ஆறு இலட்சத்து எழுபத்து ஐந்தாயிரத்து இருபத்து ஐந்து மட்டும்)** ஆனது கேட்பு அறிவிப்பு குறிப்பிட்ட தொகையுடன் வட்டியை சேர்த்தும் நோட்டீஸ் தேதிக்கு பின் திரும்ப செலுத்திய தொகையை கழித்தும் கணக்கிடப்பட்டுள்ளது.

3. கடன்தாரரின் கவனத்திற்கு கூறப்படுவது யாதெனில் கடனீட்டுச் சொத்துக்களை மீட்பதற்கான காலஅவகாசம் சர்பாசி சட்டம் பிரிவு 13(8)க்கு உட்பட்டதாகும் என தெரிவித்துக்கொள்கிறோம்.

சொத்துக்கள் விபரம்

அயிட்டம் நெ.1 : 1597½ ச.அடி நிலத்துடன் குடியிருப்பு கட்டிடமானது நாமக்கல், நாமக்கல் தாலுக்கா, அனியாபுரம் கிராமம், சர்வே நெ.117/28, (பழைய சர்வே நெ.117/2)-ல் அமைந்துள்ளது. இச்சொத்தானது **திரு. N.சுரேஷ்** பெயரில் உள்ளது. இதற்குண்டான **எல்லைகள் : மேற்கே :** சர்வே நெ.117/2 தொடர்பான நிலம், **கிழக்கே :** 30அடி அகல தென்வடல் பொது ரோடு, **தெற்கே :** பிளாட் 171-ன் தெற்கு பகுதி மற்றும் **வடக்கே :** பிளாட் 170.

அயிட்டம் நெ.2 : 15 சென்ட் நிலத்துடன் குடியிருப்பு கட்டிடமானது நாமக்கல் பதிவு மாவட்டம், மோகனூர் துணைப்பதிவு மாவட்டம், அனியாபுரம் கிராமம், சர்வே நெ.190/198-ல் அமைந்துள்ளது. இச்சொத்தானது **திரு. N.சுரேஷ்** பெயரில் உள்ளது. இதற்குண்டான **எல்லைகள் : தெற்கே :** கிழமேல் பஞ்சாயத்து ரோடு, **மேற்கே :** சர்வே நெ.190/16 நிலம், **வடக்கே :** அப்பாவு நிலம் மற்றும் **கிழக்கே :** ஆனந்த் நிலம்.

இடம் : லத்துவாடி
நாள் : 14-02-2023

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இந்தியன் ஓவர்சீஸ் வங்கி